DINDINGUL DISTRICT

# காலாண்டுத் தேர்வு - 2023

வகுப்பு : 12
காலம் : 3.00 மணி

## தமிழ்

பதிவு எண் :
மொத்த மதிப்பெண்கள் : 90

### பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 14x1=14

1. 18 வயது நிறைவடையாத குழந்தைகள் வாகனம் இயக்கினாலோ, விபத்தினை ஏற்படுத்தினாலோ அக்குழந்தையின் பெற்றோர்க்கு .............................. சிறைதண்டனை கிடைக்கும்.
அ) 3 ஆண்டுகள் ஆ) 5 ஆண்டுகள் இ) 7 ஆண்டுகள் ஈ) 10 ஆண்டுகள்

2. இலக்கணத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் ..........................
அ) தண்டியலங்காரம் ஆ) நன்னூல் இ) தொல்காப்பியம் ஈ) யாப்பருங்கலக்காரிகை

3. "நம்மிலும் மெலியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்துவிட வேண்டுமென்று பாடுபடுதலே நாம் வலிமை பெறுவதற்கு வழியாகும். வேறு வழியில்லை" என்றவர் ....................
அ) ரா.அ.பத்மநாபன் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) வ.உ.சி.

4. நரம்புக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது.
அ) சூரிய ஒளிக்கதிர்கள் ஆ) நீர் நிலைகள் இ) மழை மேகங்கள் ஈ) மழைத்துளிகள்

5. "உவா உற வந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்" – இவ்வடியில் சுக்ரீவனையும் இராமனையும் குறிக்கும் சொற்கள் முறையே ......................
அ) உவா, உடுபதி ஆ) உடுபதி, இரவி இ) இரவி, உடுபதி ஈ) உவா, இரவி

6. "**கடாஅ** யானைக் கலிமான் பேக". – இவ்வடியில் தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு.
அ) இசைநிறை அளபெடை ஆ) சொல்லிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) பெயரெச்சம்

7. திருக்குறள் பொருட்பாலிலுள்ள இயல்கள் ..............................
அ) அரசியல் ஆ) அமைச்சியல் இ) ஒழிபியல் ஈ) இவை மூன்றும்

8. "காவினெம் கலனே; சுரக்கினெம் கலப்பை" –இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள் ................
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி

9. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
அ) கடுக்காய் ஆ) மணத்தக்காளியிலைச் சாறு இ) வசம்பு ஈ) மாவிலைக்கரி

10. பொருத்துக.
அ) முதல்கல் – 1) தோப்பில் முகமது மீரான்
ஆ) உரிமைத் தாகம் – 2) உத்தம சோழன்
இ) தலைக்குளம் – 3) பாரதியார்
ஈ) கண்ணன் பாட்டு – 4) பூமணி
அ) 2,4,1,3 ஆ) 4,3,2,1 இ) 2,1,4,3 ஈ) 3,4,2,1

11. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் – காரணம் –
அ) நேரடி மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
ஈ) அ, ஆ, இ – அனைத்தும்

12. "மதமானபேய் பிடியா திருக்கவேண்டும்" என்று கந்தவேளிடம் வேண்டியவர் .......................
அ) திருஞானசம்பந்தர் ஆ) வள்ளலார் இ) கவிமணி ஈ) பாரதியார்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

13. 'பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும் ......................' – இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?
அ) வினைப்படிமம் ஆ) பயன்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

14. தவறான கூற்றைத் தேர்வு செய்க.
அ) பண்புத்தொகை, வினைத்தொகையாக வரும் சொற்களைப் பிரித்து எழுதக் கூடாது.
ஆ) இடைச்சொல்லுடன் சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.
இ) 'கள்' விகுதி சேர்ந்த சொற்களைப் பிரிக்காமல் எழுத வேண்டும்.
ஈ) இரட்டைக்கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுதக் கூடாது.

## பகுதி – II

### பிரிவு - 1

3x2=6

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?
16. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
17. ஞாலத்தின் பெரியது எது?
18. 'தருமமிகு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே' – தொடருக்குப் பதவுரை எழுதுக.

### பிரிவு - 2

2x2=4

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.
20. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு எழுதுக.
21. முறை வைப்பு என்றால் என்ன?

### பிரிவு - 3

7x2=14

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?
23. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.
(அ) அச்சாணி இல்லாத தேர்போல **( அல்லது )** ஆ) தாமரை இலை நீர்போல
24. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. மலை, மழை
25. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
புத்தகம் படிக்கும்பொழுதுக் கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.
26. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. (அ) கோவில் **( அல்லது )** (ஆ) தலைமை
27. பேச்சு வழக்கை எழுத்து வழக்கமாக மாற்றுக.
ஊரு நல்லா இருந்தாதான் நாமளும் நல்லாயிருக்கலாம்.
28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. (அ) கலங்கி (ஆ) பொலிந்தான்
29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. (அ) பூம்பாவாய் (ஆ) உள்ளொன்று
30. கலைச் சொல்லாக்கம் தருக. (அ) Artistic whole (ஆ) Metro Train



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# விவேகானந்த வித்யாலய மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பண்ணைக்காடு பிரிவு

## காலாண்டுத் தேர்வு - 2023

வகுப்பு: 12 தமிழ் மதிப்பெண்கள்: 90

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 14*1=14

| | | | |
|---|---|---|---|
| 1 | அ). 3 ஆண்டுகள் | 8 | இ). இசைக்கருவி |
| 2 | இ). தொல்காப்பியம் | 9 | அ). கடுக்காய் |
| 3 | ஆ). பாரதியார் | 10 | அ). 2, 4, 1, 3 |
| 4 | ஈ). மழைத்துளிகள் | 11 | ஈ). ஆ, ஆ, இ - அனைத்தும் |
| 5 | அ). உவா, உடுபதி | 12 | ஆ). வள்ளலார் |
| 6 | அ). இசைநிறை அளபெடை | 13 | இ). மொய்ப்படிமம் |
| 7 | ஈ). இவை மூன்றும் | 14 | ஈ). இரட்டைக்கிளவிச் சொற்களை சேர்த்து எழுதக் கூடாது. |

பகுதி – 2

பிரிவு -1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3*2=6

15 அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?

- தண்டியலங்காரம்
- மாறனலங்காரம்
- குவலயானந்தம்

16 எதிர்பாரத நிகழ்வுகளை ஜலாலுத்தின் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

- ஆனந்தம்
- மனச்சோர்வு
- அற்பத்தனம்
- விழிப்புணர்வு

17 ஞாலத்தின் பெரியது எது?

துன்பத்தில் ஒருவர் செய்த உதவி சிறியதாக இருந்தாலும், அது செய்யப்பட்ட காலத்தை பார்க்கும் பொழுது ஞாலத்தை விட பெரியதாகும்.

18 தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே – தொடருக்குப் பதவுரை எழுதுக?

- தருமமிகு சென்னையில்: அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையில்
- கந்த கோட்டத்துள்வளர் தலம்: வளர்தலமாகிய கந்த கோட்டத்து கோவிலில்
- ஓங்கு கந்தவேளே: எழுந்தருளிய கந்தவேளே.

பிரிவு -2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2*2=4

19 நடை அழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

- நடைப்பெற்றியலும் என்றும்
- நடை நவின்றொழுகும் என்றும்
- சில சொற்றொடர்களை தொல்காப்பியம் கூறுகிறது

20 புக்கில், தன்மனை – சிறுகுறிப்பு எழுதுக?

- தற்காலிகமாகத் தங்கும் இடம் புக்கில்.

www.Padasalai.Net

| | |
|---|---|
| | • கணவனும் மனைவியும் **தனியாக வாழுமிடம் புக்கில்.** |
| 21 | முறை வைப்பு என்றால் என்ன? |
| | ♣ பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு விஷேச நாளாக கொண்டாடப்படும்.<br>♣ உபாத்தியாயர் ஒன்றை சொல்ல அதை மாணவர்கள் பலரும் சேர்த்து சொல்வதை முறை வைப்பு என்று சொல்லுவார்கள். |

பிரிவு -3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக: **7*2=14**

| | |
|---|---|
| 22 | மொழியின் சொற்றொடர் அமைப்பை விளக்கி கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை? |
| | **திணை, பால், எண், இடம்** ஆகியன மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்க்கும் பயன்படுத்துவதற்கும் உதவுகின்றன. |
| 23 | உவமைத் தொடர்களைச் சொற்சொடர்களில் அமைத்து எழுதுக: |
| | **அச்சாணி இல்லாத தேர் போல:**<br>போதிய ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் கல்வியானது **“அச்சாணி இல்லாத தேர்போல”** தள்ளாடுகிறது. **(அல்லது)**<br>**தாமரை இலை நீர்போல:**<br>சாதுக்கள் **‘தாமரை இலை நீர்போல’** இல்லற வாழ்வில் பற்றற்றுக் கிடந்தனர் |
| 24 | மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக. மலை, மழை |
| | **மழை** பெய்ததால் மண் அரிப்பு ஏற்ப்பட்டு **மலை** போல் ஓரிடத்தில் குவிந்துள்ளது. |
| 25 | வல்லினமெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:<br>புத்தகம் படிக்கும் பொழுதுக் கூர்ந்துக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும். |
| | புத்தகம் படிக்கும் பொழுது_ கூர்ந்து_ கவனம் அறிவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும். |
| 26 | சொல்லை பிரித்தும் சேர்த்தும் பொருள் கொள்க: அ). கோவில் (அல்லது) ஆ). தலைமை |
| | அ. **கோவில்** : யாழினி **கோவிலுக்குச்** சென்றாள்<br>**கோ வில்** சிறந்தவன் ராசராசன்.<br>ஆ. **தலைமை** : **தலைமை** பொறுப்பில் உள்ளவர்கள் நேர்மையாக இருத்தல் வேண்டும்.<br>**தலை(க்கு)மை** பூசி நரைமுடியை மறைப்பார்கள் சிலர். |
| 27 | பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக:<br>ஊரு நல்லா இருந்தா தான் நாமளும் நல்லாயிருக்கலாம். |
| | ஊர் நன்றாக இருந்தால்தான் நாம் அனைவரும் நன்றாக இருக்கலாம். |
| 28 | ஏதேனும் ஒன்றனுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக? அ). கலங்கி ஆ). பொலிந்தான் |
| | அ. **கலங்கி = கலங்கு + இ**<br>**கலங்கு** – பகுதி, **இ** - வினையெச்ச விகுதி.<br>ஆ. **பொலிந்தான் = பொலி + த் (ந்) + த் + ஆன்**<br>**பொலி** – பகுதி; **த்** - சந்தி; **த் ந்** - ஆனது விகாரம்; **த்** - இறந்த கால இடைநிலை;<br>**ஆன்** - ஆண்பால் வினைமுற்று விகுதி. |
| 29 | ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக? அ). பூம்பாவாய் ஆ). உள்ளொன்று |
| | அ. **பூம்பாவாய் = பூ + பாவாய்**<br>விதி: ‘பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்’ – **பூம்பாவாய்.** |

www.Padasalai.Net

